**DEPOSITION OF WITNESS**

**Judicial Form No. 53**

**(See Rule 42)**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

Calender : **CC No.148/2024**
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : **P.W.** 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலசுப்பிரமணியம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | வேலுசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.05.2025.

முதல் விசாரணை

நான் சங்கர்நகரில் வசித்து வருகிறேன். EB ல் JE Operator ஆக வேலை செய்து வருகிறேன். நான் புதியதாக வந்த வீட்டின் அருகில் திருட்டு வழக்கு சம்பந்தமாக போலிசார் வந்து வரைபடம் வரைந்தார்கள். அங்குள்ள இட விவரங்களையும் எழுதி கையொப்பம் கேட்டார்கள். நான் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் மற்ற நபரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடைய தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. வரைபடத்தில் வீட்டு விவரங்களும் தென்னை மர விவரங்களையும் எழுதியிருந்தார்கள். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**1** மற்றும் **3** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் எப்பொழுது மேற்கண்ட வீட்டிற்கு சம்பவம் நடப்பதற்கு எத்தனை மாதங்கள் முன்பாக புதிதாக குடி வந்தேன் என்றால் ஒரு மாதம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடும் எனது வீடும் பக்கம் பக்கம் என்றால் சரிதான். இடையே ஒரு வீடு உள்ளது என்றால் இல்லை, பக்கம் பக்கம் தான். ஆனால் தனி காம்பவுண்டு உள்ளது. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டின் உரிமையாளரின் பெயரை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, ஷிப்ட்டுக்கு சென்று வருவேன், அதனால் கேட்டுக் கொள்ளவில்லை.
2. நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை, சம்பவ இடத்தில் தான் வைத்து கையெழுத்து போட்டேன். என்னிடம் கையெழுத்து பெறும் பொழுது எத்தனை காவலர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு பேர். மேற்படி காவலர்கள் என்ன வண்டியில் வந்தார்கள் என்றால் டிவிஎஸ் வண்டியில் வந்தார்கள்.

பார்வை மகசரில் உள்ள விவரங்கள் எனக்கு முழுமையாக சொன்னார்கள் என்றால் சொன்னார்கள், என் முன்பு தான் வரைபடம் வரைந்தார்கள். நான் சம்பவம் நடந்த சமயத்தில் வீட்டில் இருந்தேனா என்றால் இல்லை.

3. எனக்கு அசா.1 யார் என்று முழுமையாக தெரியாது என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்காக தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கையொப்பம் செய்த ஆவணம் யாரால் எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான், போலீசார் இரண்டு நபர்கள் வந்தார்கள், அவர்கள் எழுதினார்கள். போலீசாரை தவிர்த்து மற்ற நபர்கள் வேறு யாரும் கையொப்பம் செய்த சமயத்தில் இல்லை என்றால் சரிதான். நான் பக்கத்து வீடு என்பதால் என்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் நான் மேற்படி இடத்தில் குடியிருக்கவில்லை என்றாலும், போலீசாரால் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் தான் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன். போலீஸ் சொல்லி தான் தற்போது சாட்சியளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

வழக்கறிஞர் வைக்க வசதி உள்ளது என்றும், வீட்டில் அணுகி வழக்கறிஞர் வைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

<u>மறுவிசாரணை</u> இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.